## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 204/2025**

திரு. நீதிராஜன் (P.W.–1) **08.04.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படிப்பு உள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். என்ன கம்பெனியில் அயனிங் வேலை செய்துவருகிறேன் என்றால் மிக்மிடியா கம்பெனியில் வேலை பார்க்கிறேன். அதை தவிர வேறு வேலை பார்க்கிறீர்களா என்றால் இல்லை. பைனான்ஸ் தொழில் செய்து வருகிறீர்களா என்றால் இல்லை. பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. பிரதிவாதியை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் கடன் வாங்குவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்து தெரியும்.

2. பிரதிவாதியின் பெற்றோரை தெரியுமா என்றால் அவருடைய தாயாரை தெரியும். தாவா கடன் உறுதி சீட்டு தேதிக்கு முன்பு பிரதிவாதியுடன் பண விவகாரம் உண்டா என்றால் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் ஆமாம். பிரதிவாதி தாவாவில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குறையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிர் வழக்குரை விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரி. எனக்கு எந்த வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் மற்றும் தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்கில் கணக்கு உள்ளது.

3. வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்னுடைய ஜிபே என் என்ன என்றால் ஜிபே வசதி இல்லை. என்னுடைய அலைபேசி எண் 8012635295 என்றால் ஆமாம். இந்த எண்ணிற்கு ஜிபே வசதி உள்ளது என்றால் ஆமாம். மேலே சொன்ன அலைபேசி எண்ணிற்கு ஜிபே எண்ணிற்கு பிரதிவாதி பணம் அனுப்பி உள்ளார் என்றால் தவறு. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பிரிவாகி மேலே சொன்ன என்னுடைய ஜிபே எண்ணிற்கு

25.4.2024 முதல் 19.3.2025 வரை தொகைகள் அனுப்பியதற்கான ரசீதுகளின் ஒளி நகல் என்றால் சரி. அது **பி.வா.சா.ஆ–1.**

4. அவ்வாறு அனுப்பப்பட்ட தொகையின் மொத்த எண்ணிக்கை ரூ.74,650/– என்றால் சரி. பிரதிவாதி படித்துக் கொண்டு பகுதி நேர வேலை பார்த்து வந்ததில் பெற்ற தொகையை தான் எனக்கு பல தேதிகளில் அனுப்பி உள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. 07.01.2018 ஆம் வருடமே பிரதிவாதியை எனக்கு தெரியும் என்றால் தவறு. 2018 ஆம் வருடம் பிரதிவாதி என்னிடம் ரூபாய்.25,000/– கடனாக பெற்று இருந்தார் என்றால் தவறு. அந்த சமயத்தில் பிரதிவாதி 20 ரூபாய் வெற்று முத்திரை தாளில் கையொப்பம் மட்டும் செய்து கடனுக்காக என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் தவறு. அதேபோல் அவருடைய இருசக்கர வாகனம் TN39CH7378 வாகனத்தின்அடகு வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் தவறு. அந்த வாகனம் இன்று வரை என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் தவறு. அந்த வாகனம் நான் வேறு ஒருவரிடம் இருந்து வாங்கி உள்ளேன்.

5. நான் வேறு ஒருவரிடம் இருந்து அந்த வாகனத்தை வாங்கவில்லை இன்று வரை மேலே சொன்ன இருசக்கர வாகனம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது நான் வாகனத்தில் பெயரை மாற்றவில்லை. எதிர்வழக்குறையில் குறிப்பிட்டுள்ள பல தேதிகளில் தொகை செலுத்தப்பட்டதாக சொல்லும் கணக்கிற்கு ரசீது கொடுத்தீர்களா என்றால் அவ்வாறு தொகை எனக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு தொகையைப் பெற்றுக் கொண்டு ரசீது பிரதிவாதிக்கு நான் கொடுக்கவில்லை என்றால் தவறு நான் எந்த தொகையும் பெறவில்லை.

6. தாவா கடன் உறுதி சீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த ஒரு கடன் தொகையும் பிரதிவாதி என்னிடம் இருந்து கடனாக பெறவில்லை என்றால் தவறு. கடன் தொகை பெற்றுக் கொண்டுதான் ஆவணத்தை பிரதிவாதி எழுதி கொடுத்தார். சாட்சி தன்னிச்சையாக முன்வந்து ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையொப்பம் செய்து ரேகை வைத்து கொடுத்ததாக கூறுகிறார். பிரதிவாதி அவ்வாறு ஆவணத்தை வா.சா.ஆ–1

ஏற்படுத்தவில்லை அதில் உள்ள கைரேகை, கையொப்பம் பிரதிவாதி உடையது இல்லை என்றால் தவறு.

7. தாவா கடனுறுதி சீட்டு மோசடியாக ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல.தாவா கடனுறுதி சீட்டை உருவாக்கிய போது யார் இருந்தார்கள் என்றால் தாவா கடனுறுதி சீட்டை ஜனார்த்தனன் என்பவர் எழுதினார். அதில் ரஞ்சித் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். அவர்களைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் ஆமாம். இரண்டு சாட்சிகளும் நான் அழைத்து அன்று வந்தார்கள் என்றால் சரி. அந்த இரண்டு சாட்சிகளும் என்னுடைய ஆதாய சாட்சிகள் நான் அழைத்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சாட்சி வேண்டும் என்பதால் அழைத்தேன். வா.சா.ஆ–1 ன் படி எந்த ஒரு கடன் தொகையும் பிரதிவாதி பெறவில்லை அது மோசடியானது என்றால் சரியல்ல.

8. தாவா கடனுறுதி சீட்டில் குறிப்பிட்டுள்ள தொகையை பெறக்கூடிய தகுதி பிரதிவாதிக்கு அன்றைய தேதியில் இல்லை என்றால் சரியல்ல. 2024 ஆம் வருடத்தில் இருந்து பல தேதிகளில் தொகைகளை ஜிப்பே மூலம் எனக்கு பிரதிவாதி அனுப்பி உள்ளதால் தாவா கடன் உறுதி சீட்டில் சொல்லப்பட்டுள்ள தொகையை பிரதிவாதி பெறவேண்டிய அவசியமே இல்லை என்றால் தவறு. குடும்பச் செலவுக்காக கேட்டு பெற்றுக் கொண்டார். அவ்வாறு அவர் பெற்றுக் கொள்ளவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அனுப்பிய சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொள்ளவில்லை அதனால் தான் பதில் அனுப்பவில்லை என்றால் தவறு பெற்றுக் கொண்டுள்ளார்.

9. தாவா வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதி எந்த தொகையும் செலுத்தவில்லை என்று தவறாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. 2018 ஆம் வருடம் ரூ.25000/– கடன் பெற்றுக்கொண்ட பிறகு வண்டியை அடமானம் வைத்து பெற்ற கடனுக்காக தான் எதிர் வழக்குரையில் வாதுரைத்துள்ள தேதிகளில் பிரதிவாதி பணம் திருப்பி செலுத்தியுள்ளதால் தாவா காலவரையால்

பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த ஒரு கடன் தொகையும் பிரதிவாதி எனக்கு திருப்பி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல மோசடியான ஆவணத்தைக் கொண்டு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றான் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.04.08 18:20:11 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.